Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 121

வெள்ளிக்கிழமை
27 மார்ச் 2026

பங்குனி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## 7 தமிழக மீனவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 27
அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தமிழக மீனவர்கள் 7 பேர் யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக் கடற்பரப் >>11

# ரவிராஜ் எம்.பி. கொலை வழக்கு; மேல்நீதிமன்றத் தீர்ப்பு இரத்து!

*10 வருடங்களுக்குப் பின்னர் புதிய திருப்பம்*

*மீண்டும் விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் உத்தரவு*



கொழும்பு, மார்ச் 27
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கு தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த கடற்படை அதிகாரிகள் உள்ளிட்ட ஐந்து பிரதிவாதிகளை விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய தீர்ப்பை ரத்துச் செய்ததுடன் குறித்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்துமாறும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளது. >>11

sirumi

சிறுமி வைஷாலி விவகாரம்:

## தவறு தாதியர்களில் மட்டுமா? நீதிமன்றம் ஏற்க மறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
'யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்ட சிறுமிக்கு, மருத்துவத் தவறால் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்ட வழக்கில், மருந்துப் பெட்டியில் குறிக்கப்பட்ட அளவுப் பிரமாணத்தின்படி தாதியர்களே மருந் தேற்றியிருக்க >>11

யாழ். பண்ணைப் பகுதியில் நேற்று

## துரத்தி துரத்தி கத்தி வெட்டு!

*இளைஞர் படுகாயம்*

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணம், பண்ணைப் பகுதியில் கோட்டைக்குச் சமீபமாக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்களை வன்முறைக்குழுவொன்று நேற்று மாலை துரத்தி துரத்தி வெட்டியதில் இளை >>10

## தலைவர் பிரபாவின் காணியில் தமிழர் வரலாற்று மையம்

*பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய நீதிமன்று அனுமதி!*

யாழ்ப்பாணம், மார்ச் 27
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வாழ்ந்த காணியில் அமைக்கப்படவிருக்கும் தமிழர் வரலாற்று மையத்தின் கட்டுமானப் பணிகள் மற்றும் அங்கு முன்னெடுக்கப்படவிருக்கும் செயற்பாடுகளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது.
காங்கேசன் துறைப் பொலி >>11

## கியூ ஆரில் மோசடி முறைப்பாடுகள் 1,000+

கொழும்பு, மார்ச் 27
எரிபொருள் விநியோகத்துக்காக அறிமுகம் செய்யப்பட்ட கியூ. ஆர். முறையில் இடம்பெற்ற மோசடி >>11

## எரிபொருள் நெருக்கடி: கைகொடுக்கிறது ரஷ்யா

*உயர்மட்டக்குழு நேற்று வருகை*

கொழும்பு, மார்ச் 27
இலங்கை - ரஷ்யா இடையிலான எரிசக்தி ஒத்துழைப்பைப் பல மடங்காக அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
ரஷ்யாவின் எரிசக்திப் பிரதி >>10



வாகனம் மோதியதில்

## பால் விற்ற பெண்மணி பரிதாபமாக மரணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 27
பால்விற்கச் சென்றபோது பின்னால் வந்த வாகனம் மோதியதில் படுகாயமடைந்த பெண்ணொருவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்தார்.
கோப்பாய் வடக்கு கோப்பாயைச் சேர்ந்த தர்மலோகேஸ்வரன் சங்கீதா (வயது- 43) என்பவரே >>11

யாழ். நகரில்

## களவாடப்பட்ட நகைகள் பொலிஸாரால் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ். நகரில் வீடொன்றில் இருந்து களவாடப்பட்ட 14 பவுண் தங்க நகைகள் யாழ். குற்றத் தடுப்புப் பொலிஸாரின் துரித நடவடிக்கையால் நேற்று மீட்கப்பட்டன.
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள குறித்த வீட்டில் வசிக்கும் கணவனும் மனைவியும் பணி நிமித்தம் பகலில் வீட்டில் இருப்பதில்லை. அதனால் வீட்டைப் >>10

## கைது!

கொழும்பு, மார்ச் 27
மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் முன்னாள் மூன்று அதிகாரிகள், வாகனங்களை மோசடி முறையில் பதிவு செய்தமை மற்றும் உரிமை மாற்றம் செய்தமை தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று லஞ்ச ஊழல் >>10

பூச்சாந்தி புராண்

"தர்மத்தின் வாழ்வுதனை
சூது கவ்வும் மறுபடியும்
தர்மமே வெல்லும்
எண்டது உண்மைதான்
கண்டியளோ"

சிகிச்சைகள் நிறைவுற்றதால்

## சி.ஐ.டி.யிடம் சுரேஷ் சாலே!

கொழும்பு, மார்ச் 27
திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த சுரேஷ் சாலே, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் >>10

## செம்மணியில் வெள்ளநீர் இன்று வெளியேற்றம்!

யாழ்ப்பாணம், மார்ச் 27
அரியாலை - செம்மணி மனிதப்புதைகுழியில் தேங்கியுள்ள மழைநீரை அவதானித்து, அதனை வெளியேற்றும் நடவடிக்கை இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.
செம்மணி மனிதப்புதைகுழியை அகழ்வு செய்வதற்கான முன்னேற்பாடாகவே, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வெள்ள நீர் வெளியேற்றப்பணிகள் இடம்பெறவுள்ளன. >>09

மக்கள் பேராதரவு பெற்ற தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 26.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4387 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 38 58 64 72 |
| விசேட எழுத்து | V |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 26.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1454 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 35 44 46 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 26.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0413 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 2 5 7 3 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 26.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2493 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 05 26 30 48 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 26.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6145 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 9 9 7 6 1 3 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 26.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2175 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 09 19 36 52 |
| விசேட எழுத்து | U |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 26.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0261 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 26 53 |

# மத்திய கிழக்குப் போரால் பொருளாதார அச்சுறுத்தல்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 27

**'டித்வா' சூறாவளி அனர்த்தத்தின் பாதிப்புகளிலிருந்து நாடு மீண்டுவரும் நிலையில், மத்திய கிழக்கில் மூண்டுள்ள போர்ச்சூழல் உலகளாவிய ரீதியில் ஒரு 'வெளியக அதிர்ச்சியை' ஏற்படுத்தியுள்ளது. இது வரும் காலங்களில் இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

உலகளாவிய ரீதியில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக, இலங்கைக்கு வரும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை ஏற்கனவே 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இது நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பணவீக்கம் 5 சதவீத மட்டத்தை எட்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், போர்ச் சூழலால் எரிபொருள் விலை மற்றும் விநியோகச் சங்கிலியில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக, துல்லியமான கணிப்புகளை மேற்கொள்வது தற்போது கடினமாகியுள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் 'டித்வா' சூறாவளிப் பேரழிவுக்கு மத்தியிலும் இலங்கை 5 சதவீதப் பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. எனினும், தற்போதைய பூகோள அரசியல் நெருக்கடி இந்த வளர்ச்சி வேகத்தைச் சற்றுத் தாமதப்படுத்தக்கூடும் என அஞ்சப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் தொடர்ந்து பணத்தை அனுப்பி வருவதால், வெளிநாட்டுப் பணவனுப்பல்களில் இதுவரை வீழ்ச்சி எதுவும் அவதானிக்கப்படவில்லை.

2022ஆம் ஆண்டு நிலவிய கடும் நெருக்கடியுடன் ஒப்பிடுகையில் நாடு தற்போது வலுவான நிலையில் இருக்கின்றது.

இந்த நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல; ஒட்டுமொத்த உலகமுமே இந்த அதிர்ச்சியை எதிர்கொண்டுள்ளது.

எமது நாடு ஏற்கனவே பல சவால்களை வென்று மீண்டது போல, இதிலிருந்தும் மீண்டு வரும்- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 26.03.2026 | வியாழக்கிழமை | 0853 | S | 2 5 4 8 9 2 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 26.03.2026 | வியாழக்கிழமை | 3119 | S | 02 06 44 57 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 26.03.2026 | வியாழக்கிழமை | L | 17 22 39 73 | 5280 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 26.03.2026 | வியாழக்கிழமை | 0949 | 12 24 28 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 26.03.2026 | வியாழக்கிழமை | | 02 18 25 26 | 4831 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 26.03.2026 | வியாழக்கிழமை | L | 09 | 18 28 33 37 | 2295 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 26.03.2026 | வியாழக்கிழமை | P | 03 16 31 53 | 2945 |

## நீர் நுகர்வு அதிகரிப்பு; சிக்கனம் பேணுங்கள்

கொழும்பு, மார்ச் 27

நாட்டில் நிலவிவரும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் நுகர்வு சடுதியாக அதிகரித்துள்ளது. தற்போதைய நிலை நீடித்தால் நீர் விநியோகத்தை மட்டுப்படுத்த நேரிடும் எனத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மேல் மாகாணத்தில், பிரதானமாக கொழும்பு மாவட்டத்தில் நீருக்கான தேவை அதன் உற்பத்தித் திறனை விட அதிகரித்துள்ளது. நீரை வீணாக்குவதைக் குறைக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக குறைந்துவருவதால், விநியோக நேரத்தைக் குறைக்கவேண்டிய நிலை ஏற்படும். தொடர்ச்சியான நீர் விநியோகத்தை உறுதிப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்- என்றார். (ச-இ)

## எரிபொருள் விலை உயர்வு; ரயில் பயணம் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 27

எரிபொருள் விலை உயர்வு மற்றும் பேருந்துக் கட்டண உயர்வின் பின்னணியில் பொதுமக்கள் அதிகளவில் ரயில்களை நாடத்தொடங்கியுள்ளனர் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பயணிகள் அதிகரிப்பால் ரயில்வேத் திணைக்களம் அண்மைக் காலமாக இலாபம் ஈட்டிவருகின்றது.

பயணிகள் தேவை அதிகரித்துள்ள நிலையில் ரயில் சேவைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## குறைந்த வெப்பநிலை நுவரெலியாவில் பதிவு

நுவரெலியா, மார்ச் 27

நாட்டில் மிகக்குறைந்த வெப்பநிலையாக 7.8 செல்சியஸ் வெப்பநிலை நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 26.2 செல்சியஸ் வெப்பநிலையும், காலி மாவட்டத்தில் 25.9 செல்சியஸ் வெப்பநிலையும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## எரிபொருள் விநியோகக் கட்டணத்தை உயர்த்துக

### விநியோகஸ்தர்கள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, எரிபொருள் விநியோகக் கட்டணங்களையும் உயர்த்துமாறு இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கிகள் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் எரிபொருள் விலை 101 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக விநியோக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே விநியோகக் கட்டணங்களை 25 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொருள்கள் விலையேற்றம் சுற்றிவளைப்புகள் தீவிரம்!

கொழும்பு, மார்ச் 27

சந்தையில் நுகர்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையில், நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகளையும் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

சில வியாபாரிகள் அத்தியாவசியப் பொருள்களை மறைத்து வைத்து செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குவதற்கும், விலைகளை உயர்த்துவதற்கும் முயற்சிக்கின்றனர்.

எனவே, வரவிருக்கும் பண்டிகைக் காலத்தில் சந்தையில் இடம்பெறக்கூடிய முறைகேடுகளைத் தவிர்க்கும் நோக்கில், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அனைத்து விசாரணை அதிகாரிகளும் வார இறுதி நாள்களிலும் அரச விடுமுறை நாள்களிலும் தொடர்ச்சியாகக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

நுகர்வோர் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் அல்லது சந்தை முறைகேடுகள் குறித்து 1977 என்ற துரித இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### ரூ. 275 மில்லியன் சொத்துக்குவிப்பு

# ரம்புக்வெல மகனுக்கெதிராக 'திடுக்' சாட்சியங்கள் பதிவு!

கொழும்பு, மார்ச் 27

**முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் மகன் ரமித ரம்புக்வெலவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள 275 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சாட்சியங்களை முன்வைத்துள்ளது.**

இந்த வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது கொள்ளுப்பிட்டியில் உள்ள 'கெபிடல் டவர்' சொகுசு வீடமைப்புத் தொகுதியில் தலா 65 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு வீடுகளை ரமித ரம்புக்வெல கொள்வனவு செய்ததாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீடுகள் தொடர்பான விலை பேசும் பேச்சுகள், விஜேராம வீதியிலுள்ள அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நடைபெற்றன என்று சாட்சியமளிக்கப்பட்டது.

அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரித்தொகையைக் குறைப்பதற்காக, கொள்முதல் பத்திரத்தில் வீட்டின் உண்மையான பெறுமதியை மறைத்து, குறைத்துக் குறிப்பிடுமாறு ரமித கோரியதாகச் சாட்சியாளர்கள் தெரிவித்தனர்.

வங்கி ஒன்றில் 65 மில்லியன் ரூபா பணத்தை வைப்பிலிட ரமித தரப்பு முயன்றபோது அந்தப் பணம் எவ்வாறு ஈட்டப்பட்டது என்பதற்கான முறையான ஆவணங்களை வழங்க அவர்கள் தவறியுள்ளனர் எனத் தனியார் வங்கி மேலாளர் சாட்சியமளித்தார். 2022 ஜனவரி முதல் 2023 செப்ரெம்பர் வரையான சுமார் ஒன்றரை ஆண்டு காலப்பகுதியில், ரமித ரம்புக்வெல சுமார் 296 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளைச் சேர்த்துள்ளார்.

இதில் 275 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சொத்துகள் எவ்வாறு ஈட்டப்பட்டன என்பதை வெளிப்படுத்த அவர் தவறியுள்ளார் என்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணைக்காக மேலதிக சாட்சியாளர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதுடன், வழக்கு எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

## ரூ.10 கோடி பெறுமதியான போதைப்பொருள்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 27

சட்டவிரோதமான முறையில் 'குஷ்' ரக போதைப்பொருளைக் கடத்திவந்த இருவர் கட்டுநாயக்க விமானநிலைய வருகை முனையத்தில் வைத்து போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் கொண்டுவந்த 4 பயணப் பொதிகளைச் சோதனையிட்டபோது, அவற்றின் அடிப்பகுதியில் சூட்சுமமான முறையில் 12 பொதிகளாக பொதிசெய்யப்பட்டு மறைத்துவைக்கப்பட்டிருந்த 10 கிலோ கிராம் 476 கிராம் 'குஷ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருள்கள் சுமார் 10 கோடியே 47 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியுடையவை. இந்த போதைப்பொருள் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கொள்வனவு செய்யப்பட்டமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## இணையவழி மோசடிகள்; 9 வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு, மார்ச் 27

இணையவழி நிதி மோசடிகளில் ஈடுபட்ட 9 வியட்நாமிய பிரஜைகள் காலி கொடகந்த பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் சுற்றுலா விசாக்கள் மூலம் நாட்டுக்கு வந்துள்ளார்கள்.

சந்தேகநபர்கள் கொடகந்த பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது கணினி, மடிக்கணினி மற்றும் 84 கைபேசிகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச-இ)

## காணியொன்றிலிருந்து பெண் சிசுவின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 27

பள்ளியாகொடல்ல பகுதியில் உள்ள தனியார் காணியொன்றிலிருந்து பெண் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிசுவின் பெற்றோர் யார்? எதற்காக சிசு கைவிடப்பட்டது என்பது தொடர்பில் மீகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## போதைமாத்திரைகளை விற்ற வர்த்தகர் கைது!



கொழும்பு, மார்ச் 27

நீண்ட காலமாக போதைமாத்திரைகளை பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்து வந்த வர்த்தகர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் நகரைச் சேர்ந்த ஒரு மருந்தக உரிமையாளரே ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரிடமிருந்து விற்பனைக்கு வைத்திருந்த 1400 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபரை ஹட்டன் நீதி மன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச-இ)




## எங்கேயும் எப்போதும்...!

முந்தி ஒரு பகிடிக்கதையொண்டு சொல்லுவினம். ஆம்ஸ்ட்ரோங் நிலவுக்குப் போயிருக்கிறார். அங்க அவர் முதன்முதலா காலடி வைச்சிட்டு, திரும்ப விண்கலத்துக்கு ஏறுவம் எண்டு வெளிக்கிட பின்னுக்கு ஒரு குரல் அவரைக் கூப்பிட்டிருக்கு. சார் ஒரு சாயா! எண்டு கிளாஸில பிளேன்ரீயோட ஒரு மலையாளி நிண்டானாம். சப்பாட்டுக்கடை யாவாரம் எண்டால் மலையாளியள் இல்லாத இடமேயில்லை எண்டதுக்கு நக்கலா இந்தக் கதையைச் சொல்லுவினம். அப்பிடி சில பிறவியள் எல்லா இடத்திலையும் இருப்பினம். அவையள் இடம், பொருள், ஏவல் ஒண்டும் பாக்காமல் தாங்கள் வழக்கமாச் செய்யிற வேலையளை அங்கையும் மறக்காமல் செய்வினம். எங்கும் செல்வினம், எதுவும் செய்வினம். அப்பிடிப்பட்டவையில கண்ட இடங்களிலையும் வெத்தில துப்பிறவையும் ஒருவகை. அவைக்கு எங்க நிக்கிறம்,என்ன செய்யிறம் எண்டெல்லாம் யோசினை இருக்காது. வாய்க்குள்ள அதக்கின வெத்திலை எப்ப நிறையுதோ அப்ப வெளியில அதைத் துப்பவேணும்.அந்த இடம் கோயிலா இருந்தாலென்ன,சந்தையா இருந்தாலென்ன, ஆஸ்பத்திரியா இருந்தாலென்ன அதைப் பற்றியெல்லாம் அவைக்கு அக்கறையில்லை.

ஆரும் மந்திகை ஆஸ்பத்திரிக்குப் போய் அங்க இருக்கிற லிப்ட்டுக்க போனால், 'ஏன்ரா இதில ஏறினம்?' எண்டு முகத்தைச் சுழிப்பினம். பளபளக்கிற அந்த லிப்ட்டுக்கையும் மினக்கெட்டு ஏறிப்போய், வெத்திலையைத் துப்பு துப்பெண்டு துப்பி சில ஈனப் பிறப்புகள் தங்கட முத்திரையைப் பதிச்சுப்போட்டுப் போயிருக்கினம். உந்த லிப்ட் என்னத்துக்குப் பூட்டியிருக்கு எண்டு அந்த ஜென்மங்களுக்கு தெரியாதோ? ஏலாத வருத்தக்காரரை அவசரமாக் கொண்டு போறதுக்கெண்டுதானே எத்தினையோ லட்சங்களைச் செலவழிச்சு அந்த லிப்ட்டை பூட்டியிருக்கினம். அதுக்க போய் இப்பிடி 'புளிச் புளிச்' எண்டு மூலைக்கு மூலை வெத்திலையைத் துப்பி வைச்சால் வருத்தகாரரை என்னெண்டு அருவருப்பில்லாம அதுக்க ஏத்திக் கொண்டு போறது? உந்த வெத்திலைத் துப்பலால இல்லாத பொல்லாத வருத்தங்களுமெல்லோ வலிய வந்து உடம்பில ஏறிடும். ஒண்டு 'வளர்ப்பு' சரியில்லை, இல்லாட்டி 'மிதப்பு' கூடிப்போட்டுது அதாலதான் இப்பிடித் துப்பி வைச்சிருக்கினம்.

ஆஸ்பத்திரி எண்டது கோயிலுக்குச் சமமான இடம். அங்க போய்த் தங்களோட எச்சிலைத் துப்பி நாசமாக்குற இந்த 'வெத்திலைத் துப்பியளை' என்ன செய்யிறது? லிப்ட்டுக்குள்ள சிசிரிவி கமரா பூட்டி, 'இங்கே வெற்றிலை துப்பாதீர்!' எண்டு அறிவிப்புப் பலகை வைச்சால் ஏன் இப்பிடிச் செய்யப்போயினம்? எண்டு மூளை வீங்கின சிலர் கேக்கலாம். இப்பிடிப்பட்ட வெத்திலை துப்பியள் அப்பவும் தங்கட எளியவேலையைச் செய்யாமல் இருக்கமாட்டினம். அவையவைக்குள்ள ஒரு கட்டுப்பாடும், சுத்தமும் இல்லாட்டி என்னதான் 'சிஸ்டம் சேஞ்ச்' வந்தாலும் எங்கட ஊர் உருப்படாது கண்டியளோ!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

27.03.2026 வெள்ளிக்கிழமை




# சனிப்பெயர்ச்சிப் பலன்

மகர ராசிக்கு, வாக்கிய பஞ்சாங்கப்படி 6.3.2026 முதல் 24.4.2028 வரை, சனி 3இல் அமர்கிறார். இனித் தொட்டதெல்லாம் வெற்றியடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். குழந்தைப்பாக்கியம் இல்லாதவர்களுக்கு வாரிசு உருவாகும். மகளுக்கு நல்ல வரன் அமைந்து, திருமணத்தைச் சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள்.

பொருளாதாரம் செழிப்புற்றுத் திகழும். பணப் பற்றாக் குறையால் அவதிப்பட்ட நிலை மாறும். தன்னம்பிக்கை துளிர்விடும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சைனஸ் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். வி.ஐ.பி. அந்தஸ்து பெறுவீர்கள். வீடு வாங்கும் கனவு நிறைவேறும்.


சனிபகவான் 2.4.2026 முதல் 14.4.2027 உத்திரட்டாதியில் செல்வதால், திடீர்ப் பணவரவு உண்டு. சொந்த ஊரில் செல்வாக்கு உயரும். அவரே 14.4.2027 முதல் 24.4.2028 வரை உங்களின் சப்தம ஜீவனாதிபதியான புதனின் நட்சத்திரமான ரேவதியில் செல்வதால் கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் விலகும். புது வேலை கிடைக்கும். சம்பளம் உயரும். சனி வக்ர நிலையில் சஞ்சரிக்கும் சனி பகவான் உங்களின் 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் பூர்விகச் சொத்தை மாற்றியமைப்பீர்கள். பிள்ளைகளின் பிடிவாதத்தைச் சமாளிக்கப் போராடுவீர்கள். உயர்கல்வி, திருமணத்திற்காக அதிகம் செலவு செய்வீர்கள். சொத்து விவகாரங்களைக் கவனமாகக் கையாளுங்கள்.



## மகரம்

இந்த ராசியைச் சேர்ந்த பெண்களுக்கு ஆரோக்கியம் மேம்படும். வீட்டில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பணியில் சம்பளம் உயரும். எதிர்காலத் திட்டங்களுக்கு அஸ்திவாரம் போடுவீர்கள்.

வியாபாரிகளே, திடீர் இலாபம் அதிகரிக்கும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். விளம்பர யுக்திகளைச் சரியாகக் கையாண்டு பழைய சரக்குகளை விற்றுத்தீர்ப்பீர்கள். கடையை நவீனமயமாக்குவீர்கள். அரசாங்கக் கெடுபிடிகள் குறையும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும், சம்பளப் பாக்கியும் உடனே கிடைக்கும். சிலருக்கு, அதிக சம்பளத்துடன் கூடிய புது வேலை அமையும். பிரச்சினை தந்த மேலதிகாரி மாற்றப்படுவார். கணினித் துறையினருக்கு, வேலைக்கேற்றபடி சம்பளம் உயரும்.




# தடைகளைத் தாண்டிப் பயணிப்போம்

நல்லதைச் சொல்பவர்கள் நல்லதைச் செய்பவர்கள் எதிர்க்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் ஓரங்கட்டப்படுவதும் தனிமைப்படுத்தப்படுவதும் இயேசுவின் காலத்தில் மட்டுமல்ல இன்னும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. உலகிற்கு வரும் போது எதையும் கொண்டுவருவதில்லை. செல்லும் போதும் எதையும் கொண்டு செல்வதும் இல்லை. நாம் செய்யும் நற்செயல்களே எம்மோடு கூடவரும். இதை உணர்ந்தவராய் ஒருவர் தான் வாழும் போதே தன் சொத்தை உறவுகளுக்குப் பகிர்ந்து கொடுத்தார். இந்த நற்செயலை மளுங்கடிக்கும் விதத்தில் தமது பூர்வீகச் சொத்தை அடைந்து விட்டோம் என்ற மமதையில் தற்புகழ் கூறி தம்பட்டம் அடித்து பெருமை தேடிக் கொண்டனர். ஆனால் நல்ல காரியம் புரிந்தவர்களின் உறவை உடைத்து நடுத்தெருவில் விட்டுவிட்டனர். நற்செயல்களைச் செய்யும் போதும் உண்மையை உரக்கச் சொல்லும் போதும் நீதிக்காக குரல் கொடுக்கும் போதும் கிடைக்கும் பலன் எம்மைத் துன்பத்தின் உச்சநிலைக்கு இட்டுச் செல்லும் என்பதே யதார்த்தமாகிறது. இதனால் வேதனைதான் மிச்சம் என்றாலும் இறைவனின் உடனிருப்பு அவர்களுக்குத் துணையாய் இருந்து பாதுகாக்கும் என்பதே உண்மையாகும். துன்பங்கள் எதிர்ப்புகள் புறக்கணிப்புகள் வந்தாலும் சோர்ந்துவிடாது நற்செயல்களைச் செய்ய இறைவன் அழைப்பு விடுக்கின்றார். சிலுவையின் தடம் பதித்து நம்பிக்கையோடு தடைகளைத் தாண்டிப் பயணிப்போம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

# புளியம்பொக்கணை ஆலய பொங்கல் உற்சவம் ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 27

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தலங்களில் ஒன்றான, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் பிரம்பு வழங்கும் வைபவத்துடன் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. தொடர்ந்து பண்டம் எடுத்துவருவதற்கான பண்ட வண்டில்கள் அண்டமாவடி பிள்ளையார் ஆலயத்தைச் சென்றடைந்தன. பண்டங்களுடன் வண்டில்கள் எதிர்வரும் முதலாம்திகதி மீண்டும் ஆலயத்தைவந்தடையும். தொடர்ந்து பொங்கல் வழிபாடுகள் இடம்பெறும். (க-113-55)

# மகளிர் தினமும் கௌரவிப்பும்

முல்லைத்தீவு, மார்ச் 27

மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றிய அங்கத்தவர்களுக்கான மதிப்பளிப்பு மற்றும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு, பாண்டியன் குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

சங்கத்தின் உறுப்பினர் திருமதி ஜெகதாம்பிகை விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், முதியோரின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (க-55)



# இலவச நீரிழிவு மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

நீரிழிவுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ முகாம் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. ஒரு மணி வரை சுன்னாகம் பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட முகாமை அகம் சுரக்கும் தொகுதியியல் சிறப்பு மருத்துவ நிபுணர் ஜெ.துளசிகா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். பங்கேற்கும் பொதுமக்களுக்கு இலவச பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள், இரத்த அழுத்தப் பரிசோதனை, உடற்திணிவுச்சுட்டிக் கணிப்பீடு, மருத்துவ ஆலோசனைகள் மற்றும் இலவச நீரிழிவுக் கைநூல் என்பன வழங்கப்படவுள்ளன. (ச-இ)

# குருபூசை நாள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சிவதொண்டன் சபையின் குருநாதரது 62ஆவது குருபூசை நாள் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சிவதொண்டன் நிலையத்துப் புராணமண்டபத்தில் நடைபெறும். யோகசுவாமிகளது திருமேனிக்குத் திவ்யமான அபிசேக ஆராதனையைத் தொடர்ந்து மகேஸ்வரப் பூசை நிகழும். குருபூசைக்கு முதல் மூன்று நாள் களும் வழமைபோன்று ஆச்சிரம வாழ்வு நாள்களாக அனுஷ்டிக்கப்படும். இந்த நாள்களில் நற்சிந்தனை ஓதி நிறைவு செய்யப்படும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## பயிரை மேய்ந்த வேலிகள்!

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் பொலிஸாரால் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம், ஒரு நாகரிகமடைந்த சமூகத்தின் பாதுகாப்புப் பொறிமுறை குறித்துப் பலத்த கேள்விகளை எழுப்பியுள்ளது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய சீருடை அணிந்த காவலர்களே, மதுபோதையில் வன்முறையாளர்களாக மாறிச் சாதாரண பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. காங்கேசன்துறைப் பிரிவு குற்றத்தடுப்புப் பொலிஸார் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள இவர்கள், சட்டத்தை அமுல்படுத்த வேண்டியவர்கள் என்பதையும் மறந்து, சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டது 'வேலியே பயிரை மேய்ந்த' கதையாகவே உள்ளது.

பொதுவாக, இத்தகைய அத்துமீறல்கள் நிகழும்போது உடனடியாக மேற்கொள்ளப்படும் 'இடமாற்றம்' என்பது ஒரு தீர்வாகாது. இடமாற்றம் என்பது நிர்வாக ரீதியான ஒரு நகர்வே தவிர, அது ஒரு குற்றத்திற்கான தண்டனை அல்ல. ஒரு இடத்தில் தவறு செய்தவரை இன்னொரு இடத்திற்கு மாற்றுவது, அந்தத் தவறுக்கான பொறுப்பைத் தட்டிக்கழிப்பதே ஆகும். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸார் மீது உரிய சட்ட ரீதியான விசாரணை நடத்தப்பட்டு, அவர்கள் பணிநீக்கம் உள்ளிட்ட கடுமையான ஒழுக்காற்றுத் தண் டனைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அப்போதுதான், பொலிஸ் திணைக்களத்தின் மீது பொதுமக்கள் வைத்துள்ள எஞ்சியிருக்கும் நம்பிக்கையாவது காப்பாற்றப்படும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இவ்விடயத்தில் தலையிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும், கடந்த காலங்களில் இது போன்ற பல விவகாரங்களில் 'விசாரணை' என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து, மக்கள் மறந்தவுடன் மீண்டும் அதே உத்தியோகத்தர்களை எவ்விதத் தண்டனையுமின்றிப் பணியில் அமர்த்தும் ஒரு மறைமுகப்போக்கு நிலவிவருகின்றது. இம்முறையும் அத்தகையதொரு கண்துடைப்பு நாடகம் அரங்கேறுமாயின், அது சீருடை அணிந்த மற்றைய வன்முறையாளர்களுக்கும் ஊக்கமளிப்பதாகவே முடியும். சட்டத்தைக் காப்பவர்கள் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல என்பதை அரசாங்கமும் பொலிஸ்மா அதிபரும் செயலில் நிரூபிக்கவேண்டும்.

பொலிஸாரின் கடமை என்பது பொதுமக்களை அச்சுறுத்துவதல்ல; மாறாக, அவர்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதாகும். சீருடை என்பது அதிகாரத்தைக் காட்டக் கொடுக்கப்பட்ட உரிமம் அல்ல, அது மக்களுக்குச் சேவை செய்வதற்காக வழங்கப்பட்ட ஒரு பொறுப்பு. மணற்காட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீதான விசாரணை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் அமைய வேண்டும். தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவதே, எதிர்காலத்தில் இத்தகைய அதிகார அத்துமீறல்கள் தொடராமல் இருப்பதற்கான ஒரே வழியாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## பொய்யாமொழி

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்**

**பொருள்:** நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள்.






## அனைத்துப் பரீட்சைகளும் திட்டமிட்டவாறு நடக்கும்!

### பிரதமர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 27**

**நாட்டில் நிலவும் தற்போதைய சவால்களுக்கு மத்தியிலும், கல்வி அமைச்சின்கீழ் திட்டமிடப்பட்டுள்ள அனைத்துப் பரீட்சைகளையும் உரிய காலத்தில் தடையின்றி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அரச சேவையைச் சீரான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் இரண்டாவது கூட்டம், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தற்போதைய மின்சாரத்தேவை அதிகரிப்பு மற்றும் உலகளாவிய நெருக்கடிகளால் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படக்கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. அதன்படி, கல்வி அமைச்சினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணையின்படி அனைத்துப் பரீட்சைகளையும் நடத்துவதற்குப் பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

மேலும் கல்வித்துறையில் டிஜிற்றல் சேவை அமைப்புகளைப் புகுத்துவதன் மூலம் சேவைகளை விரைவுபடுத்தவும், அமைச்சுகளின் வலுசக்திப் பயன்பாட்டைக் குறைத்துச் சிக்கனத்தைப் பேணவும் தீர்மானிக்கப்பட்டது. (ச-இ)

## வெப்பம் தொடரும்

நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை எதிர்வரும் மாதங்களுக்கும் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் மெரில் மென்டிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது நாட்டின் அநேகமான பிரதேசங்களில் பகல் மற்றும் இரவு நேரம் அதிக வெப்பத்துடன் கூடிய காலநிலையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மேல், சப்ரகமுவ, வடமேல், வடமத்திய மற்றும் தென் மாகாணங்களும் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் வெப்பத்தின் அளவு அதிக ஆபத்து நிலையில் இருக்கிறது. மக்கள் இதுதொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## ரூபா பெறுமதி ஏற்றம்

கொழும்பு, மார்ச் 27

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று வலுவடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகித அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 309 ரூபா 91 சதமாக பதிவாகியுள்ளது. அத்துடன் விற்பனை விலை 317 ரூபா 42 சதமாக பதிவாகியுள்ளது.

இதேவேளை பல்வேறு வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. (ச-இ)

## சதொசவில் பொருள்கள் விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 27

பண்டிகைக் காலத்தில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், 600 அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அவை சதொச விற்பனை நிலையங்கள் ஊடாகக் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 10 வீதத்துக்கும் அதிக எரிபொருள் முற்பதிவு

இலங்கையின் உண்மையான எரிபொருள் தேவையைக் காட்டிலும் 10 சதவீதத்துக்கும் அதிகமான அளவு எரிபொருள் முன்கூட்டியே முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. தற்போதைய நிலைவரப்படி, எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதி வரை நாட்டுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு குறித்த தேவையற்ற அச்சம் காரணமாக, சில விநியோகஸ்தர்களும் பொதுமக்களும் அதிகளவில் எரிபொருளைச் சேமிக்க முயற்சிக்கின்றனர். சாதாரணமாக 3 பவுசர் எரிபொருளைக் கொள்வனவு செய்யும் நிலையங்கள், திடீரென அடுத்த 6 மாதங்களுக்காக 18 பவுசர்களைக் கோருவது விநியோகச் சங்கிலியில் தேவையற்ற அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. அனைவரும் வழமையான நுகர்வு முறையைப் பின்பற்றினால், தட்டுப்பாடு இன்றி அனைவருக்கும் எரிபொருள் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கைது நடவடிக்கைக்கு புதிய கட்டுப்பாடுகள்!

**கொழும்பு, மார்ச் 27**

**இலங்கையில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கைச் சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் சந்தேகநபர்களைக் கைதுசெய்வது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளார்.**

அனைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு இதுதொடர்பான எழுத்துபூர்வ அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. புதிய வழிகாட்டலின்படி, ஒருவரது பேச்சு அல்லது அறிக்கைக்காக அவரை ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் கைதுசெய்ய வேண்டுமாயின், அந்தப் பேச்சு நேரடியாகப் போரைத் தூண்டுவதாக இருக்கவேண்டும். அல்லது, பாகுபாடு, பகைமை மற்றும் வன்முறைக்கு வழிவகுக்கும் வகையில் தேசிய, இன அல்லது மத வெறுப்பைத் தூண்டுவதாக இருக்க வேண்டும்.

இனிமேல் இந்தச் சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைதுசெய்வதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி தன்னிச்சையாகச் செயற்படமுடியாது. கைது நடவடிக்கைக்கு முன்னதாக, சட்டப் பிரிவின் பணிப்பாளருக்கு விடயத்தைத் தெரியப்படுத்தவேண்டும். அவரிடமிருந்து முறையான எழுத்து பூர்வ அனுமதியைப் பெற்ற பின்னரே கைது நடவடிக்கையை முன்னெடுக்கமுடியும். இந்தப் புதிய விதிமுறைகளை மீறிச் செயற்படும் அல்லது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் விசாரணை அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் எச்சரித்துள்ளார். (ச-இ)



## ரணில் விக்கிரமசிங்கவிடம் பாடம் கற்றுக்கொள்ளுங்கள்

### அஜித் மன்னப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

தற்போதைய அரசாங்கம் தனது நிர்வாக இயலாமையை மறைக்கப் போராடுகின்றது. அரசாங்கம் தனது அகந்தையைத் தூக்கி எறிந்துவிட்டு ரணில் விக்கிரமசிங்கவிடம் சென்று இந்த நெருக்கடிகளை எவ்வாறு தீர்ப்பது என்ற ஆலோசனையைப் பெற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ரணில் விக்கிரமசிங்க செலுத்திய அதே பொருளாதார வாகனத்தையே இவர்களும் செலுத்துகின்றனர். எனினும், முழுமையாக எரிபொருள் நிரப்பத் தெரியாமல் அரைவாசிப் பெற்றோலுடன் தட்டுத்தடுமாறி ஓட்டுகின்றனர்.

அரசாங்கம் மக்கள் மீது எவ்வித அக்கறையும் இன்றித் திறைசேரியை நிரப்புவதிலேயே ஆர்வம் காட்டுகின்றது. ரணில் விக்கிரமசிங்க கொண்டு வந்த கியூ.ஆர். குறியீட்டு முறையைத் தற்போதைய அரசால் பராமரிக்க முடியவில்லை. 15,000 பேருந்துகளில் 8,000 பேருந்துகளுக்கு முறையான கியூ.ஆர். குறியீடுகள் இன்னும் வழங்கப்படவில்லை.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை சர்வதேச அளவில் நகைப்புக்குரியதாக மாறியுள்ளது.

தனிப்பட்ட பழிவாங்கல் அல்லது அரசியல் மேடைப் பேச்சுகளால் ஒருபோதும் நெருக்கடிகளைத் தீர்க்க முடியாது - என்றார். (ச-

## மருந்து விலை உயரக்கூடும்!

### மருத்துவத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல், வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை மற்றும் உள்நாட்டில் அதிகரித்துள்ள எரிபொருள் விலை காரணமாக, இலங்கையில் மருந்துப் பொருள்களின் விலைகள் உயரக்கூடும் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது. மருந்து இறக்குமதியாளர்களும் உள்ளூர் உற்பத்தியாளர்களும் தங்களது உற்பத்தி மற்றும் விநியோகச் செலவு அதிகரித்துள்ளதைக் கருத்திற்கொண்டு, விலைகளைத் திருத்தியமைக்க ஆரம்பித்துள்ளனர். மருந்து விலைகள் அதிகரித்தால், நீண்டகாலமாகச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கான சிகிச்சைகள் பாதிக்கப்படக்கூடும். அரசாங்கம் மருந்து விலைகளைக் கட்டுப்படுத்த வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டபோதிலும், சிலதனியார் மருந்தகங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்கின்றன. இந்தச் சுகாதார நெருக்கடியைத் தவிர்க்க அரசாங்கம் உடனடியாகத் தலையிடவேண்டும். இல்லையெனில், இது ஒரு பெரிய பொதுச் சுகாதார நெருக்கடியாக உருவெடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நீச்சல் வீரர் நவரத்தினசாமியின் 72ஆவது ஆண்டு வெற்றிக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பாக்குநீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்து சாதனை படைத்த, வடமராட்சி மண்ணின் மைந்தன் முருகுப்பிள்ளை நவரத்தினசாமியின் 72ஆவது ஆண்டு வெற்றிக் கொண்டாட்டம், தொண்டைமானாறில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தொண்டைமானாறு இளைஞர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில், தொண்டைமானாறு பாலத்துக்கு அருகாமையில் அவரது நினைவுத்திடலில் இடம்பெற்ற நிகழ்வில், நவரத்தினசாமியின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, அவரது சாதனை வரலாறு எடுத்துரைக்கப்பட்டது.

நீச்சல் வீரரான நவரத்தினசாமி தனது 44ஆவது வயதில், 1954ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனைப் பயணத்தை வல்வெட்டித்துறையில் இருந்து ஆரம்பித்து மறுநாள், தமிழ்நாட்டின் கோடியக்கரையில் நிறைவு செய்தார். இதன்மூலம் 34 மைல் தூரத்தை 27 மணித்தியாலத்தில் நீந்திக் கடந்த முதலாவது நீச்சல் வீரன் என்ற சாதனையைப் படைத்திருந்தார். (க-100)



## சிறுநீரக நோயாளர்கள் 5,000 பேர் மரணப்பிடியில்

கொழும்பு, மார்ச் 27

நாட்டில் தற்போது 5,000 நோயாளர்கள் சிறுநீரக நோயின் இறுதிக்கட்டத்தில் உள்ளனர் எனச் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில், சிறுநீரக நோய் விசேட மருத்துவ நிபுணர் நாலக ஹேரத் தெரிவித்துள்ளதாவது-

ஆண்டொன்றுக்கு சுமார் 300 சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன. நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள், வருடத்துக்கு ஒரு முறையாவது தங்களது சிறுநீரகங்களைப் பரிசோதனை செய்துகொள்வது அவசியமாகும். சிறுநீரக நோய்க்கான பிரதான காரணங்களாக நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தமே காணப்படுகின்றது. ஆரம்பகட்டப் பரிசோதனைகள் இன்மையால், பல நோயாளர்கள் இந்த நோயின் இறுதிக்கட்டத்தை எட்டிய பின்னரே தமக்கு நோய் இருப்பதை கண்டறிகின்றனர். சிறுநீரக நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, முறையான மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலம், சிறுநீரக செயலிழப்பு அபாயத்தைக் குறைத்து நோயாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் - என்றார். (ச-இ)

## QR மோசடியில் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 27

பெண்ணொருவருக்குச் சொந்தமான வாகனத்தின் தரவுகளைப் பயன்படுத்தி, கியூ.ஆர். குறியீட்டை உருவாக்கி சட்டவிரோதமாக எரிபொருள் பெற்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். 1919 எனும் அவசர அழைப்பு இலக்கத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மண்ணெண்ணெய் விற்பனை வீழ்ச்சி

குடாநாட்டில் மண்ணெண்ணெய் விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 60 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதால், நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் கொள்வனவைக் குறைத்துள்ளனர். விலை அதிகரிப்புக் காரணமாகவே விற்பனையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று எரிபொருள் விற்பனை நிலையங்கள் தெரிவித்துள்ளன. (க-17)

## போதைமாத்திரைகளுடன் ஐவர் யாழில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொழும்புத்துறை பகுதியில் வைத்து ஐந்து இளைஞர்கள் 57 போதைமாத்திரைகளுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27)



# ஆசிரியர்கள் போராட்டம்!

யாழ்., மார்ச் 27

மேன்முறையீட்டுக்கு பதில் வரமுன்னரே, அடாத்தாக தம்மை இடமாற்றம் செய்யப்பட்ட பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்குமாறு அழுத்தங்கள் வழங்கப்படுவதைக் கண்டித்து, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நல்லூரில் உள்ள பொதுச் சேவை ஆணைக்குழு அலுவலகம் முன்பாக நேற்றுக்காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இடமாற்றச் சபையால் வழங்கப்பட்ட சில இடமாற்றங்களுக்கு எதிராக நாங்கள் மேன்முறையீடு செய்திருந்தோம். ஆனால், இதுவரை எமக்கான பதில்கள் கிடைக்கப்பெறவில்லை. இது தொடர்பில் நாங்கள் பல தடவைகள் பல்வேறு தரப்பினரிடம் சுட்டிக்காட்டிய போதிலும், எந்தப் பயனும் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலையில், இடமாற்றம் வழங்கப்பட்ட பகுதிகளுக்கு கடமையாற்றச் செல்லுமாறு எமக்கு அறிவுறுத்தப்படுகின்றது. மேன்முறையீடு தொடர்பான பதில்கள் வழங்கப்படாத நிலையில், இவ்வாறு உத்தரவிடுவதையும், அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதையும் ஏற்க முடியாது. எனவே, மேன்முறையீடுகள் மீதான பதில்கள் கிடைக்கும்வரை முன்னைய இடங்களில் பணியாற்றுவதற்கு எம்மை அனுமதிக்க வேண்டும் - என்றனர். (அ-ம-66-20)

**இரு மனங்களின் விருப்பத்திற்கும், இரு குடும்பங்களின் புதிய உறவுகளுக்கும் நம்பிக்கையான பாலம்.**

76 ஆண்டுகளாக வெற்றிகரமாக செயல்பட்டு வரும்

**சர்வதேச புலவர் திருமண சேவை**

உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப சிறந்த வரன்/ மணமகளை தேர்வு செய்யஇன்றே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு எண்கள்:
021 222 7147, 077 075 7610
077 075 7896
Website address
www.pulavarmatrimony.com



அலுவலக நேரம் - திங்கள் முதல் சனி வரை
9.00 காலை - மாலை 5.00 வரை திறந்திருக்கும்

(CS/61069) J-1

## வேலணை பெருங்குளம் முத்தமாரி அம்மன் கோவில்



பதிவு இல. HA/5/JA/589
ஆலய பரிபாலன சபை
**ஆண்டிறுதி பொதுச்சபை கூட்டம்**
**புதிய பரிபாலனசபை தெரிவு (2026)**

தலைவர் - திரு.சு.சுந்தரலிங்கம் அவர்கள்
இடம் - ஆலய மண்டபம்
காலம் - 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு

**நிகழ்ச்சி நிரல்**

01. இறைவணக்கம்.
02. தலைமையுரை.
03. செயலாளர் : ஆண்டறிக்கை வாசித்தல்.
04. பொருளாளர் : ஆண்டு கணக்கறிக்கை சமர்ப்பித்தல்.
05. 2026ம் ஆண்டுக்கான புதிய பரிபாலன சபைக்கான பிரதிநிதிகள் தெரிவு.
06. நன்றியுரை.
07. இறைவணக்கத்துடன் சபைக்கூட்டம் நிறைவுறும்.

செயலாளர்
(செ.விக்னேஸ்வரநாதன்)
ஆலய பரிபாலன சபை
வேலணை பெருங்குளம்
முத்துமாரி அம்மன் கோவில்

27.03.2026

(CS/61066) J-1

கிளிநொச்சியில்


# 13 கிராம் ஹெரோய்னுடன் இருவர் நேற்றுக் கைது!

கிளிநொச்சி, மார்ச் 27

வங்கிக் கணக்குகள் ஊடாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, நூதனமான முறையில் நீண்டகாலமாக ஹெரோய்ன் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இருவர் கிளிநொச்சியில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் வட மாகாண குற்ற விசாரணைப் பிரிவினரால் கிளிநொச்சி, திருநகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் பிடிபட்டுள்ளனர்.

வாடிக்கையாளர்கள் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டதும், அவர்கள் இருக்கும் இடங்களுக்கே போதைப்பொருளை அனுப்பிவைக்கும் நுட்பமான முறையை இவர்கள் கையாண்டு வந்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 13 கிராம் 500 மில்லி கிராம் ஹெரோயின், ஒரு வாள், கைப்பேசிகள், வங்கி அட்டைகள் மற்றும் பணம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதானவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து, கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-26)

## காணவில்லை



**கதிர்வேல் பாலகுமார்**

நுவரேலியாவில் நட்டோயா ஸ்டேர்டைச் சேர்ந்த 48 வயதுடைய கதிர்வேல் பாலகுமார் அவர்கள் கடந்த (21.03.2026) சனிக்கிழமை யாழ்ப்பாணம் மானிப்பாயில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்து கொள்வதற்கு வந்தவரை காணவில்லை. இவரைக் கண்டவர்கள் பின்வரும் இலக்கத்திற்கு உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

077 647 9616, 076 916 2284

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
## மண்டபம் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல் - 2026

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட மண்டபத்தினை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் காலம் :- **27.03.2026 தொடக்கம் 09.04.2026** வரை அலுவலக நாட்களில் **மு.ப 9.00 - பி.ப 3.00 மணி**

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி :- **10.04.2026ம் திகதி மு.ப 10.00 மணிவரை**
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- **10.04.2026ம் திகதி மு.ப 10.00 மணிக்கு**
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- **தலைமை அலுவலகம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**

| கட்டிட விபரம் | தற்போதைய மாதாந்த வாடகை ரூபா (வரிகள் நீங்கலாக) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் ரூபா (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| மானிப்பாய் சிறுவர் பூங்கா வளாக கட்டிடத்தின் முதலாம் இரண்டாம் தள மண்டபங்கள் | 30,000.00 | 1,080,000.00 | 10,800.00 | 1,100.00 |


1. குறித்த மண்டபத்தினது குத்தகை வகை வருடாந்த குத்தகை அடிப்படையிலாகும் என்பதுடன் **2026.04.15 - 2029.04.14** வரையான காலப்பகுதிக்கு மட்டுமேயாகும்.
2. கேள்விப்பத்திரங்கள் 02 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு. மூலப்பிரதி. இணைப்பிரதி உட்பட 02 பிரதிகளையும் "தலைவர். உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு. வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை. மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு. உரிய காலப்பகுதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும், கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
4. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
6. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. தெரிவு செய்யப்படும் குத்தகைதாரர் தாங்கள் சமர்ப்பித்த கேள்வித்தொகையின் 1/3 பங்கு பணத்தினை (வரிகள் உட்பட) சபையால் அறிவிக்கப்படும் காலப்பகுதிக்குள் பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்தி சபையின் நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கை செய்து கொள்ளல் வேண்டும்.
8. குறித்த மண்டபமானது உள்ளக விளையாட்டு பயிற்சி. சிறுவர் தொடர்பான நிகழ்வுகள். மற்றும் சபையினால் அனுமதிக்கப்படும் நிகழ்வுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படலாம்.
9. வருடாந்த வியாபார உரிமக் கட்டணத்தினை செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்வதுடன் மண்டபத்திற்கான மின்கட்டணம் குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டும்.
10. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களினை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

27.03.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகுதி எரிபொருள் மீட்பு



வவுனியா, மார்ச் 27

வவுனியா ஏ-9 வீதியில் தாண்டிக்குளம் பகுதிக்கு அண்மையில் உள்ள வாகன திருத்தகம் ஒன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி எரி பொருள்கள் விசேட அதிரடிப்ப டையினரால் நேற் றுமுன்தினம் இரவு கைப்பற்றப்பட்டன. விசேட அதிரடிப்ப டையின் புலனாய் வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்தப்பகுதியில் உள்ள பிரபல வாகனத் திருத்தகம் சோத னைக்கு உட்படுத் தப்பட்டபோது அங்கு களஞ்சியப் படுத்தி வைக்கப்பட் டிருந்த 900 லீற் றர் சுப்பர் டீசல், டீசல் 600 லீற் றர்,பெற்றோல் 400 லீற்றர் என் பன கைப்பற்றப்பட் டன. கைப்பற்றப் பட்ட எரிபொருள் கள் ஏனைய சட்ட நடவடிக்கைகளுக்காக வவுனியா பொலி சாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச-110)


## நினைவலைகள்

| 2ஆம் ஆண்டு | 1ஆம் ஆண்டு | 31ஆம் ஆண்டு | 33ஆம் ஆண்டு |
| --- | --- | --- | --- |
|  |  |  |  |
| மாணிக்கம் அன்னலட்சுமி | மாணிக்கம் கோபாலகிருஷ்ணன் | மாணிக்கம் சிவகிருஷ்ணன் | நீலன் மாணிக்கம் |
| தோற்றம் 12.10.1944 மறைவு 03.01.2024 | தோற்றம் 23.06.1970 மறைவு 07.04.2025 | தோற்றம் 13.02.1972 மறைவு 12.09.1995 | தோற்றம் 25.09.1934 மறைவு 03.09.1993 |

பாசத்தையும் பண்பையும் ஊட்டி வளர்த்த அன்புத் தெய்வங்களே
உங்களை இழந்த நாள் முதல் தூக்கம் இன்றி தவிக்கின்றோம்.
உங்கள் பாதம் பட்ட இடங்களில் நினைவுகள் சுமந்து நடமாடுகின்றோம்.
கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்த எங்களுக்கு ஏன்தான் இந்த நிலைமையோ

நீங்கள் கனவில் வந்து கூடி மகிழும் நேரம் ஆனந்தமே.
அந்தக்கனவு நிஜம் ஆகாதா என்ற ஏக்கம் மிஞ்சுகின்றது.
அம்மா உங்களை இழந்த கண்ணீர் தான் காயு முன்னே
ஓராண்டு கடந்து சகோதரன், அப்பாவையும் இழந்து தவிக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் இறைவன் அருகில் நீங்கள் இருக்க இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

குடும்பத்தினர்
077 312 6701

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| --- | --- | --- | --- |
| 14.02.1943 | 08.03.2017 | 11.04.1947 | 27.03.2016 |

அமரர் திரு விஸ்வலிங்கம் கைலாசபிள்ளை
(முன்னாள் உரிமையாளர் வடிவேல் ஸ்ரோர்ஸ்
வங்களாவடிச் சந்தி, வேலணை)

அமரர் திருமதி கைலாசபிள்ளை செல்வராணி

பல ஆண்டுகள் கடந்தும்
பறந்துபோன உங்களை
எங்கள் விழிகள்
இன்றும் தேடுகின்றன...

நாம் சுவாசிக்கும் போதெல்லாம்
உங்களோடு நாமிருந்த
பசுமையான நினைவுகள்
எங்களைச் சுற்றி நிற்கின்றன...

அன்பாய் அரவணைத்த கைகள்,
கனிவாய் அழைத்த குரல்கள்...
இன்று மௌனித்துவிட்டன...

பெற்றோர் இல்லாத வாழ்க்கை
இருளானதாகி விட்டது...

நிழலாய் தொடரும் உம் நினைவுகள்,
நிஜமென்று எண்ண மறுக்கும் மனம்...

கண்ணீர்த் துளிகளுடன்
எம் நினைவுப் பூக்களை தூவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்...

என்றும் நினைவில், வாடும் பிள்ளைகள் & குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 23.08.1964 | 25.03.2026 |



### கனகரத்தினம் கனகதாஸ் (ராஜா)

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும், 176/1, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் கனகதாஸ் அவர்கள் கடந்த (25.03.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், ரதிதேவி (ரதி) யின் அன்புக் கணவரும், திவாகர் (கனடா), நவாகினி, பிரணகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கண்ணன், ஈசன் மற்றும் ஜேர்மனியை சேர்ந்தவர்களான காவேரி, யமுனா, விசாகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரான்ஸை சேர்ந்தவர்களான கமலா - சாந்தலிங்கம், சறோ, ரஞ்சி - சந்திரவதனன் மற்றும் குணம் - விஜயசேகரம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (29.03.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
176/1 நாவலர் வீதி, (பிறவுண் வீதி சந்தி), யாழ்ப்பாணம்
077 136 7601

(CS/61068) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சர்வதேசத்தின் முதலீடுகளை வடக்குக்குப் பெற்றுத்தரத் தயார்

## ஐ.நா.சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 27**

**உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் முதலீடுகளை, வடக்கு மாகாணத்துக்குப் பெற்றுக்கொடுக்க உறுதுணையாக இருப்போம் என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அண்ட்ரூ பிரஞ்ச் உறுதியளித்தார். மார்க் அண்ட்ரூ பிரஞ்ச் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்தின் உதவித் திட்டங்களுக்குச் சமாந்தரமாக, ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புகளான யுனிசெப் போன்றன மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை இலக்காகக் கொண்டு துரித நிவாரணங்களை வழங்கி வருகின்றது. இலங்கை போன்ற நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கான சர்வதேச நன்கொடையாளர்களின் நேரடி நிதி உதவிகள் தற்போது பெருமளவில் சுருங்கியுள்ளன.

பசுமைக் காலநிலை நிதி, இழப்பு மற்றும் சேத நிதி, கடன் பரிமாற்றங்கள் மற்றும் தனியார் முதலீடுகளை ஈர்க்கக்கூடிய அபிவிருத்திப் பத்திரங்கள் போன்ற புதிய நிதியீட்டல் முறைகள் ஊடாக, வடக்கு மாகாணத்துக்கு அதிகபட்ச உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபை தயாராகவுள்ளது. சர்வதேச முதலீட்டாளர்களை வடக்கு மாகாணத்தை நோக்கி ஈர்ப்பதற்கு, கடுமையான அதிகாரத்துவ நடைமுறைகள் மற்றும் அனுமதிகளைப் பெறுவதிலுள்ள தாமதங்கள் தடையாகவுள்ளன. எனவே இதற்கு வினைத்திறனான ஒற்றைச்சாளர முறைமையொன்று உருவாக்கப்படவேண்டும். அரசாங்கம் மற்றும் மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் நிதியைத் துரிதமாகச் செலவிடுவதற்கும், கொள்முதல் நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்கும் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் ஐக்கிய நாடுகள் சபை தயாராகவுள்ளது. காணி முரண்பாடுகள், காணி விடுவிப்புச் செயன்முறைகள் மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உட்கட்டமைப்பு வேலைத் திட்டங்களுக்கும் முழுமையான ஆதரவு வழங்கப்படும்-என்றார். (க-66)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கணேசன் தர்மதேவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் கிருஷ்ணபிள்ளை குகநாதன், சிறப்பு விருந்தினராக ஜே/ 417 துன்னாலை வடக்கு கிராம சேவகர் திருமதி கௌசல்யா கிரிசாந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-41-422)

## குருதிக்கொடை



யாழ்ப்பாணம், மார்ச் 27

கந்தர்மடம் நொதேர்ன் யுனி கல்வி நிறுவன மாணவர்கள் நடத்தும் குருதிக்கொடை முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை நிறுவன வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான குருதித் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு இந்த முகாம் நடைபெறவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு பங்களிப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-41-66)

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகையின் 339ஆவது பங்குனி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் வ.கணேசமூர்த்தி மலரின் மதிப்பீட்டுரையையும், ஆசிரியரும், சைவப்புலவருமான நி.பாபுதரன் மலரின் மதிப்பீட்டுரையையும் ஆற்றுவர். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்படவுள்ளன. (ச-66)

## விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகத்தால் நிர்வகிக்கப்படும், கணபதி பாலர் பாடசாலையின் 2026ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு, திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் இடம்பெறும். கணபதி படிப்பகத் தலைவர் சி.மதுசூதனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வேலும் மயிலும் அறக்கட்டளையின் பிரதம செயற்பாட்டு அதிகாரி தேவராஜா சிவகுமாரசாமி கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-100)

## வடக்கில் 2 இலட்சம் காணி ஆவணங்கள் கிடப்பில்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாணத்தில் சுமார் 2 இலட்சம் காணி ஆவணங்கள் கையாளப்பட வேண்டியுள்ளன என்று வடக்கு மாகாணக் காணி ஆணையாளர் இ.குருபரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற விசேட உயர்மட்டக் கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

தற்போதுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியைக் கொண்டு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் ஆவணங்களை நிறைவு செய்வதாயின், சேவையிலீடுபடும் உத்தியோகத்தர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்- என்றார். (க-66)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவத்தின் மூன்றாம் நாள் மாலை உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் போது விநாயகப் பெருமான் அழகிய பூந்தண்டிகையில் அடியவர்கள் புடைசூழ வீதியுலா வந்தார். (எ-41-66)



## சந்தனக்காப்புப் பூசை!

*யாழ்ப்பாணம், மார்ச் 27*

*மயிலிட்டித்துறை வீரமாணிக்க தேவன் துறை அருள்மிகு கண்ணகி அம்மன் கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிசேக ஆரதனைகள் இடம்பெற்று சந்தனக் காப்பு அலங்காரம் செய்யப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)*

## செம்மணியில்...

ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி செம்மணி மனிதப்புதைகுழியின் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பது என தீர்மானிக்கப் பட்டுள்ளது இதற்கமைவாக, ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி திறந்த நீதிமன்றத்தில் வழக்கு மீண்டும் அழைக்கப்படவுள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழியில், இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது 240 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அவற்றில் 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையில் தற்காலிகமாக அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டி ருந்தன. இந்த நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வை முன்னெடுப்பதற்காக, செம்மணிப்புதைகுழியில் தேங்கியிருந்த வெள்ளநீர் கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி முதற்கட்டமாக வெளியேற்றப்பட்டிருந்தது. அதன் பின்னரும் தற்போது வரை தேங்கியுள்ள நீரே இன்று வெளியேற்றப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-26)

## பஞ்சமுக விநாயகர் தண்டிகை உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலயப் பஞ்சமுக விநாயகர் தண்டிகை உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இன்று மாலை 5 மணியளவில் சாயரட்சைப் பூஜையுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை வழிபாடுகள் இடம்பெறும். தொடர்ந்து பஞ்சமுக விநாயகப் பெருமான் வீதியுலா வரும் திருக்காட்சி நடைபெறும். (41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## களவாடப்பட்ட...

பராமரிப்பதற்கென பணிப்பெண் ஒருவரை வேதனத்துக்கு அமர்த்தியிருந்தனர். இந்நிலையில், அவர்கள் வீட்டில் இருந்த 14 பவுண் நகைகளைக் காணவில்லை. இதனால் அவர்கள் அந்த நகைகள் களவாடப்பட்டிருக்கலாம் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவில் ஒரு வாரத்துக்கு முன்னர் முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்து விசாரணைகளை துரிதகதியில் முன்னெடுத்த பொலிஸார், குறித்த வீட்டில் பணிப்பெண்ணாக இருந்த 53 வயதான பெண்ணைக் கைது செய்தனர். அவரிடமிருந்து களவாடப்பட்ட 14 பவுண் நகைகளும் மீட்கப்பட்டன.

குறித்த பணிப்பெண் இதற்கு முன்னரும் தான் பணிபுரிந்த வீடுகளில் நகைகளை களவாடியிருந்தார் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-26)

## எரிபொருள்...

யமைச்சர் ரோமன் மார்ஷ் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று இலங்கையைநேற்று வந்தடைந்தது. இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் பயணம் மேற்கொண்டுள்ள அந்தக் குழுவினர், ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி உள்ளிட்ட பிரதானிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இலங்கை - ரஷ்யா இடையிலான எரிசக்தி ஒத்துழைப்பை உடன் நடைமுறைக்கு வரும் வகையில் விரிவாக்கம் செய்வது தொடர்பில் இந்தப் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படவுள்ளது. அணு சக்திப் பயன்பாடு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பிலும் ரஷ்யக் குழுவினர் ஆராயவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

மத்திய கிழக்குப் போர் காரணமாக, கடும் எரிபொருள் நெருக்கடியை இலங்கை எதிர்கொண்டுள்ளது. இலங்கைக்குத் தேவையான எரிபொருளை வழங்கத் தயாராக உள்ளதாக ஈரான் அறிவித்துள்ள போதிலும், அந்த உதவியை இலங்கை ஏற்கவில்லை. இதையடுத்தே, ரஷ்ய எரிபொருளில் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## துரத்தித்...

ஞர் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று மாலை 4 மணியளவில், இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளொன்றில் யாழ். கோட்டைப்பகுதியில் சென்றுகொண்டிருந்தனர். அப்போது திடீரென மூன்று மோட்டார் சைக்கிள்களில் கத்திகளுடன் வந்த குழுவொன்று , இந்த இரு இளைஞர்களையும் விரட்டிச் சென்று சரமாரியாக வெட்டத் தொடங்கியது. கத்தி வெட்டுகளுடன் ஒரு இளைஞர் பண்ணைக்கடலுக்குள்சென்றுவிட, மற்றைய இளைஞர் மோட்டார் சைக்கிளுடன் தப்பியோடினார். அதற்குள் அங்கு நின்ற பொதுமக்கள் வழங்கிய தகவலால், சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து வந்தனர். அதற்குள் வன்முறைக்குழுவினர் திரும்பிச் சென்றிருந்தனர். பின்னர் காயங்களுடன் கடலுக்குள் இருந்த இளைஞரை மீட்ட பொலிஸார், அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர்.

இதுகுறித்த மேலதிக விசாரணைகளை, யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-26)

## சி.ஐ.டி.யிடம்...

நேற்று மீண்டும் பொறுப்பேற்கப்பட்டார். உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில், தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்கப்பட்டுவரும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே, திடீர் சுகவீனமுற்றதால் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கான சிகிச்சைகள் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்று மீண்டும் அவர் பொறுப்பேற்கப்பட்டார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் சுரேஷ் சாலே அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். 90 நாள்கள் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தற்போது அவர் விசாரணைகளை எதிர்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## கைது...

குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒழுங்கற்ற வாகன பதிவுகள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையைத்தொடர்ந்தே அவர்கள் மூவரும் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டனர். (அ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்வி சந்திரிக்கா கனேஸ்பரன்**
(முன்னாள் இசை ஆசிரியர் யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை)

இசைக்கடல் என அமைந்து
பண்ணிசை அலைகள் நிறைந்து
திசையெங்கும் தீர்க்கமுறு புகழ் படைத்து
வசையணுகாது வாழ்ந்து
விண் புகுந்து
நாரதர், தும்புரு வரிசையில்
நடையிடும் நம் இசைத் தெய்வத்தின்
நினைவுகளோடு....
ஓம் சாந்தி..... சாந்தி.... சாந்தி

அன்னையின் மடியில் 21.11.1964
இறைவனடியில் 07.04.2025

செட்டிவளவு, மானிப்பாய்.
குடும்பத்தினரும், மாணவர்களும்

(CS/61074) J-1

## மரண அறிவித்தல்



**திருமதி மேரி யேசுதாசன்**
(ஓய்வுநிலை மருத்துவதாதி)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கண்டி வீதி, மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி யேசுதாசன் அவர்கள் நேற்று (26.03.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை - மதலேனம் தம்பதியினரின் அன்பு மருமகளும், பஸ்ரியாம்பிள்ளை யேசுதாசன் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெனிற்றா (ஜேர்மனி), ஜெயதிலக், வலன்னரன் (ஜேர்மனி), அனிற்றா ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்ரன் (ரஞ்ஜிற் - ஜேர்மனி), வேளாயினி (பிரதேச செயலகம், வேலணை) ஆகியோரின் அன்பு மாமியாரும், நெரிஷன், ஏட்ரியன், பஸ்ரியன், வினிஷ்யா, றொணி, ஏய்டன், நெவின், ஷெகான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30.03.2026 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக மிருசுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டி வீதி,
மிருசுவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 691 6817
077 135 1615

(CS/31558)A

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 12 . 1944



மறைவு 26 . 03 . 2026

**இராசரெத்தினம் இராசரெத்தினம்மா**

உடுப்பிட்டி கொம்மாந்துறையை பிறப்பிடமாகவும், இல-31, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட இராசரெத்தினம் இராசரெத்தினம்மா நேற்று (26.03.2026) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - தங்கம்மா தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற இராசரெத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், பிரதீபா (பிரான்ஸ்), பிரசாந்த், பிரமதுரா (Cargills Bank) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெரிஸ் சேவியர் ஞானேந்திரன் (பிரான்ஸ்), பிராங்கிளின் ஜெரிஸ் (NDB Bank, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பூர்விதா (பிரான்ஸ்), பிரணிதா (பிரான்ஸ்), பிரித்விகா, ஜஸ்மித்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவபாக்கியம், சர்வானந்தம், கிருஷ்ணானந்தம் மற்றும் காலஞ்சென்றவர்களான சிவானந்தம், சேகரானந்தம், செல்வானந்தம், பவானந்தம் ஆகியோரின் சகோதரியும், அரசரெத்தினம், சீவரெத்தினம் (பிரான்ஸ்), திலகவதி, தனலக்ஷ்மி, கமலாதேவி மற்றும் காலஞ்சென்ற சிவயோகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.03.2026) வெள்ளிக்கிழமை பி.ப2.00 மணியளவில் (இல-31, புது வீதி கொய்யாத்தோட்டம்) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு கொண்டு செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைப்பாடுகள்...

கள் தொடர்பில் ஆயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் செயலாளர் தனபால தெரிவித்ததாவது:-

எரிபொருள் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக அறிமுகம் செய்யப்பட்ட கியூ.ஆர். முறைமையில் ஏராளமான முறைப்பாடுகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 150க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் மேலதிக நடவடிக்கைக்காக பொலிஸாருக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய மோசடிகள் தொடர்பில் சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. 60 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கியூ.ஆர். குறியீட்டுக்காக இதுவரை பதிவு செய்துள்ளனர் - என்றார். (அ-ம)

## தவறு...

வேண்டுமெனவும், மருத்துவர்களில் தவறில்லை, எனவும் பொலிஸார் முன்வைத்த கருத்தை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சாண்டில்யன் வைஷாலி என்ற சிறுமி காய்ச்சல் மற்றும் தோலில் ஏற்பட்ட தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மணிக்கட்டில் ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாளகளில் மணிக்கட்டு வீக்கமடைந்து பின்னர் அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது.

இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில், மேலதிக நீதவான் நஜமி ஹுசைன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

'சிறுமிக்கான சிகிச்சைக் குறிப்பில் மருந்தைச் செலுத்த வேண்டிய அளவீடுகள் குறிக்கப்படவில்லை என்றே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் காண்பிக்கின்றன. ஆதலால், பொலிஸாரின் முன்பின் முரணான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. மருத்துவர்களைக் கைது செய்வதற்கு அல்லது சந்தேகநபர்களாக இணைப்பதற்கு சட்டமா அதிபரின் அனுமதி ஆலோசனை பெற வேண்டுமாயின், தாதியர்களைக் கைதுசெய்து சந்தேகநபர்களாக முற்படுத்தியதிலும் அதே நடைமுறையே பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். ஒரே வழக்கில், இருவேறு நிலைப்பாட்டுடன் பொலிஸார் செயற்படுகின்றனர். அத்துடன், இந்த வழக்கில் பொலிஸார் திட்டமிட்ட வகையிலும், அல்லது முறையற்ற விசாரணைகள் காரணமாகவும் நீண்ட தாமதங்களை ஏற்படுத்துகின்றனர். பொலிஸாரின் செயற்பாட்டில் இந்த நீதிமன்றம் திருப்தியடையவில்லை.' என்று கடந்த தவணையில் நீதிபதி தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், அந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் பொலிஸ் தரப்பு தனது சமர்ப்பணங்களை நேற்று முன்வைத்தது.

'இந்த விவகாரத்தில் சிறுமிக்கு மருந்தேற்றிய தாதியர்கள் , அந்த மருந்துப் பெட்டிகளில் குறிக்கப்பட்டிருக்கும் அளவுப்பிரமாணத்தின் அடிப்படையிலேயே மருந்தேற்றியிருக்க வேண்டும். அதற்கு மருத்துவர்களின் பரிந்துரை அவசியமில்லை' என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பாதிக்கப்பட்ட சிறுமியின் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், அதை நிராகரித்து 'ஏற்கனவே நீதிமன்றால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில், 'நோயாளிக்கான மருந்துகளை எவ்வாறு ஏற்ற வேண்டும் என்ற அளவுப்பிரமாணம் வைஷாலியின் சிகிச்சைக் குறிப்பில் மருத்துவர்களால் பதிவுசெய்யப்படவில்லை. அத்துடன் குறித்த அசாதாரண நிலைப்பாட்டினைக் கண்டறிந்து கொள்வதற்கு 30 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட நீண்டகாலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆதலால் மருத்துவர்களும் இதில் பொறுப்புடையோரே' என்று சுட்டிக்காட்டி வாதிட்டனர். அதை மன்றும் ஏற்றுக்கொண்டது.

அதற்கு 'இந்த வழக்குத் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையொன்றை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளோம். எனவே அவரின் ஆலோசனையைப் பெறுவதற்கான நீண்டகால அவகாசத்தை நீதிமன்றம் வழங்க வேண்டும்' என்று பொலிஸார் வேண்டினர்.

'ஏற்கனவே இந்த வழக்கு இரண்டு வருடங்கள் கடந்து விட்டதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி, நீண்டதவணையை வழங்க மறுத்து, சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கான கால அவகாசத்தின் பொருட்டு ஜூன் 6 ஆம் திகதிக்கு வழக்கினை நீதிவான் தவணையிட்டார்.

நேற்றைய வழக்கு விசாரணைகளின் போது, பொலிஸ் தரப்பில் யாழ்ப்பாணப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டில்ருக், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணம் சிறுவர் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோரும், பாதிக்கப்பட்ட சிறுமியின் சார்பில் சட்டத்தரணிகள் செ.லக்சன் சட்டத்தரணி எஸ்.கே.புரந்தரன் ஆகியோரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். (அ-26)

## 7 தமிழக...

பில் வைத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். நெடுந்தீவுக் கடற்பரப்பில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையாலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் முதற்கட்ட விசாரணைக்குப் பின்னர் நீரியல்வளத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

இந்தக் கைது நடவடிக்கைக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## ரவிராஜ்...

பிரதிவாதிகளை விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை நீண்டகாலமாக விசாரணை செய்த பின்னரே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

2006 நவம்பர் 10 அன்று கொழும்பு நாரஹேன்பிட்டியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பாக கடற்படைப் புலனாய்வு அதிகாரிகள் மூவர், கருணா குழுவைச் சேர்ந்த இருவர் என 5 பேர் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டிருந்தனர். எனினும் குறித்த ஐந்து பிரதிவாதிகளையும், 2016ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்திருந்தது. நள்ளிரவில் வழங்கப்பட்ட அந்தத் தீர்ப்பில், ஏழு பேர் கொண்ட ஜூரி சபையினரின் முடிவின்படி போதிய சாட்சியங்கள் இல்லை எனக் கூறி அனைவரும் விடுவிக்கப்பட்டமை அப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த விடுதலையை எதிர்த்து சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை நீண்டகாலமாக விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இன்று வியாழக்கிழமை இந்தத் திருப்புமுனையான தீர்ப்பை வழங்கியுள்ளது. நீதியரசர்களான சசி மகேந்திரன், அமல் ரணராஜா ஆகியோரடங்கிய அமர்வு, மேல் நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பைச் செல்லுபடியற்றதாக்கி ரத்து செய்துள்ளதுடன், இவ்வழக்கை மீண்டும் ஆரம்பத்திலிருந்து விசாரணைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது. (அ)

## தலைவர்...

ஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், குறித்த மையத்தில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களை ஊக்குவிக்கும் அல்லது மீளுருவாக்கம் செய்யும் வகையிலான நடவடிக்கைகள் இடம்பெறலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் தடை உத்தரவு கோரப்பட்டிருந்தது. ஆயினும் இந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த வழக்கை அரச சட்டத்தரணி ஊடாக மார்ச் 26 ஆம் திகதி முன்னெடுக்குமாறும் நீதிமன்றால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனினும் நேற்று மன்றுக்குச் சமுகமளித்த பொலிஸ் தரப்பால், குறித்த கட்டுமானப் பகுதியில் உருவங்கள், ஓவியங்கள், பதாகைகள் அல்லது பழைய வரலாற்றுச் சின்னங்கள் ஊடாகத் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவரையும் காட்சிப்படுத்துவதன் மூலம் அந்த இயக்கத்தை மீளுருவாக்கம் செய்வதாக அமையுமென நேற்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைக் கையாண்டு வரும் அனந்தராஜ் என்பவருக்கு வெளிநாட்டிலிருந்து சுமார் 16 இலட்சம் ரூபா பணம் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், இது குறித்த நிதிப் பரிமாற்றங்கள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

இதனை நேற்றுக்கொண்ட நீதிபதி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் கீழ் விசாரணைகளைத் தொடர அனுமதியளித்ததுடன், வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை ஏப்ரல் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (அ-100)

## பால் விற்ற...

உயிரிழந்தவராவார். பத்து வயதான பெண் பிள்ளையொன்றின் தாயாரான குறித்த பெண் கணவரை இழந்த நிலையில், தனது ஜீவனோபாயத்துக்காக பால் விற்பனையில் ஈடுபட்டு வந்தார். கடந்த 22 ஆம் திகதி பால் விற்பதற்காக கோப்பாய் மருத்துவமனைக்கு அண்மித்த பகுதியில், அவர் தனது சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது அவரைப் பின்னால் அதிவேகமாக வந்த வாகனமொன்று மோதித் தள்ளியது. இதனால் தூக்கியெறியப்பட்ட அந்தப் பெண் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில்
மேசன்மார், கூலி ஆட்கள்
தேவை.
தொடர்புகளுக்கு:-
077 844 9707

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீட்டிற்கு தங்கியிருந்து
வேலை செய்வதற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
(கணவன், மனைவி விரும்பத்தக்கது.)
உணவு தங்குமிட வசதி செய்து தரப்படும்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு:-
077 639 3782, 077 712 3986
(CS/61072) J-1

பணியாளர்கள் தேவை
கொழும்பு, வவுனியா, கிளிநொச்சியில்
இயங்கிவரும் அரச அங்கீகாரம் பெற்ற
நிறுவனமொன்றிற்கு
பணியாளர்கள் தேவை.
• அனுபவமிக்கவர்கள் விரும்பத்தக்கது.
• வயதெல்லை 22 - 55 வரை
• ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
• சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுகளுக்கு:-
077 922 8354, 077 555 8759
(CS/61073) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 03 . 05 . 1940



விண்ணில் 25 . 02 . 2026

அமரர்

## மேரி கெலன் ஜெயசீலி திருஞானம் (பேபி)

கருவில் உயிராய் எமைச் சுமந்து
கருத்தில் எமையே தினம்நினைந்து
உருவாய் எம்மை உயர்த்திவிட்ட
உத்தமி நீயேன் விட்டகன்றாய்?

இறையாய் நாங்கள் கண்கண்ட
இறவாக் காவியம் நீதானே
மறையாய் உந்தன் வழிகள்தான்
மாசுகள் நீக்கி எமைக்காக்கும்

கண்ணை இமைகள் காப்பதுபோல்
கணங்கள் தோறும் எமைக்காத்து
எண்ணம் செயல்கள் எல்லாமே
எமக்காய் ஈய்ந்த தாய்நீயே!

உடலை உணர்வை உடமைகளை
உவந்தே எமக்காய் ஈய்ந்தவள்நீ
கடமை கண்ணியம் காத்தலென
காலம் எல்லாம் காத்தவள்நீ!

கடவுள் பாதம் தஞ்சமென
கடந்தே போனாய் எம்தாயே
நடக்கும் எங்கள் நாட்களெல்லாம்
நாளும் வாழும் உன்நினைவே

(cs.56770) (N-1)

60 (102) கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணகம் 22 . 05 . 1943



விண்ணகம் 06 . 04 . 2025

## அமரர் சின்னப்பிள்ளை செல்லத்துரை


ஆயிரம் சொந்தங்கள் அரவணைத்தாலும்
அன்போடு எமை அணைக்க நாம் செய்யும் தவறுகளை
அதட்டலுடன் அக்கறையுடன் உரிமையுடன் கண்டிக்க
அடக்கி வைத்த ஆசைகளை அடம்பிடித்து கேட்டிட
சோகத்தில் இருக்கும்போது சொல்லி அழ
சந்தோசத்தில் இருக்கும்போது சொல்லி மகிழ - எமது
அப்பா எமக்கின்றில்லையே!
சமைக்கத் தெரியாத பருவத்தில் நாம் சமைத்த உணவினை
நல்லாக இருக்குதென்று சுவைத்துப் பாராட்டிய - எமது
அப்பா எமக்கின்றில்லையே !
தவறி வந்த எத்தனையோ அலைபேசி அழைப்புக்களில்
"Dad" என்ற பெயரில் தவறியும் கூட ஒரு அழைப்பு வர
எம் அப்பா எமக்கின்றில்லையே !
ஆண்டொன்று ஓடினாலும் ஆயிரம்பேர் ஆறுதல் கூறினாலும்
எம்மை விட்டு நீங்கள் சென்ற அந்த நாள் இன்றும் எம் வாழ்வில்
மறக்க முடியா வலி தந்த நாளாகும் அப்பா !

பலாலி கிழக்கு,
பலாலி.

(CS/31510) J-1

என்றென்றும் உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் யோகநாதன் (யோகண்ணை மனேஜர்)

### (முன்னாள் முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம், தர்மபுரம்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், புன்னை நீராவி, விசுவமடுவில் வசித்தவரும் தற்போது நல்லூர் யாழ்ப்பாணத்தில் வசித்துவருபவருமான சுப்பிரமணியம் யோகநாதன் அவர்கள் நேற்று (26.03.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், இலட்சுமியின் அன்புக் கணவரும், கௌரிநேசனின் (வைத்தியர் யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புத் தந்தையும், நிறோஜாவின் (தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை) அன்பு மாமனாரும், யாழிசை, நர்த்தகி ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், பசுபதி, கமலாவதி, பரமேஸ்வரி, வேதநாயகி, இந்திராணி, புஸ்பராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர், விசுவமடு மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகம்மா, காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், தர்மலிங்கம் மற்றும் நாகேஸ்வரி, தியாகராசா, தர்மஇரத்தினம், நவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தோற்றம் 11.04.1947 | மறைவு 26.03.2026

211/7, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (CS/61067) J-1

தகவல் :
கௌரிநேசன் (மகன்) - 077 944 6488
இலட்சுமி (மனைவி) - 076 333 8011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.